# மிளிர்

## வண்ணங்கள்

இதழ் - 2 மாசி - 01 2022



www.aramonstream.com




# ஆசிரியர் பக்கம்

மாற்றங்கள் ஒன்றே தான் மாறாதது!

எத்தனை உண்மை வரிகள் இவை மாற்றங்கள் இல்லாத வாழ்கையை நினைத்து பார்க்க முடிகிறதா உங்களால்? நினைத்து பாருங்கள் குழந்தைகள் குழந்தைகளாகவே, முதியவர்கள் முதியவற்களாகவே, மாறாத காலங்கள், சாயாத பொழுதுகள், பிறப்பும் இறப்பும் காணாத உயிர்கள், வலியும் வேதனையும் தீராத நெஞ்நங்கள். இப்படி நீண்டு கொண்டே இருக்கும்.

மாறாக, குழந்தைகள் ஒரு நாள் முதியவராவதும், முதியவர் ஒரு நாள் மறைந்து போவதும், இன்று வலியை தாங்கும் நெஞ்சங்கள் நாளை மகிழ்ச்சியை தாங்குவது இயல்பாக நடப்பது எவ்வளவு சிறப்பு மிக்கது என்று எண்ணிப் பாருங்கள்.

வண்ணங்கள் இல்லாத வாழ்க்கையும் அப்படியே.


வண்ணங்கள் இல்லாவிட்டால் நாம் பார்க்கும் அனைத்துமே நம் இதயத்தில் வெறுமையை மட்டுமே உணர்திக் கொண்டுள்ளதாய் இருக்கும். அப்படி பட்ட வண்ணங்களை கொண்டாடுகிறது இந்த மாத மிளிர்!


வாருங்கள் எங்களுடன் சேர்ந்து கொண்டாடி மகிழ!


ரேவதி...

மயிலையில் பிறந்த குறுகிய பா! 8
குறிஞ்சிப் பாட்டு 11
மாய உலகம் 20
தன்னம்பிக்கை 24
அறிவியல் உலகம் 17
உணவும் வண்ணங்களும் 18
மயங்கொலிச் சொற்கள் 26
பட்டாம்பூச்சி கதைகள் 12
மாணவர் பக்கம் 22
சொற்களஞ்சியம் 14
இகரம் 6
சொற்புதிர் 16
கண்டுபிடி கண்டுபிடி 19
போட்டி அறிவிப்பு 21

# வரைந்துப் பழகுங்கள்




# எங்கள் தோட்டம்

பச்சை நிற தோட்டமொன்று
எங்கள் வீட்டில் இருக்கிறதே;
எங்கள் வீட்டில் இருக்கிறதே
பச்சை நிற தோட்டமொன்று

வெள்ளை நிற மல்லிகையும்
பூத்து இங்கே குலுங்கிடுமே;
பூத்து இங்கே குலுங்கிடுமே
வெள்ளை நிற மல்லிகையும்

சந்தன நிற சம்மங்கி
மேலும் வாசனை கூட்டிடுமே
மேலும் வாசனை கூட்டிடுமே
சந்தன நிற சம்மங்கி

மஞ்சள், சிவப்பு, ரோசா என்று
எல்லா நிறத்திலும் ரோசா உண்டு
எல்லா நிறத்திலும் ரோசா உண்டு
மஞ்சள், சிவப்பு, ரோசா என்று

கருப்பில் ஏதும் பூக்கள் உண்டோ?
இருப்பின் அதனை சொல்லிடுவீர்
இருப்பின் அதனை சொல்லிடுவீர்
அதையும் தோட்டத்தில் சேர்த்திடுவோம்

- ரேவதி...



# இகரம்



_குசு






_றை





_களி




_ல்லம்


# இகரம்




_ங்கதிர்







_ஞ்சு



_னை



_ம்



# குறளான குறுகிய பா







குறள் I:

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

பொருள்:

எழுத்துக்கள் 'அ' விலிருந்து துவங்குகின்றன. அதுபோல இவ்வுலகு கடவுளை முதன்மையாகக் கொண்டிருக்கிறது.

# படம் பார்த்து கதை சொல்



# மலர்களே மலர்களே!

## குறிஞ்சிப் பாட்டு:

பத்துப்பாட்டு எனும் சங்கத்தமிழ் நூல் தொகுப்பில் அடங்கியது குறிஞ்சிப் பாட்டு. கபிலர் என்னும் புலவர் பாடியது இப்பாடல் 261 அடிகளாலான இப் பாடல் அகப்பொருளில் குறிஞ்சித்திணைப் பண்பாட்டை விளக்கும் பாடலாகும். இப்பாடலில் 99 மலர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில் முதல் 5 மலரை இன்று காண்போம்.

### 1. காந்தள்:


வேறுபெயர் : செங்காந்தள்.

இந்த மலரை தளை அவிழ்ந்த மலர் என்றும் கூறுவர். ஏழு நாட்கள் வாடாமல் இருக்கும் இது தமிழ்நாட்டின் மாநில பூ.கார்த்திகை மாதத்தில் பூப்பதால் இதை கார்த்திகை மலர் என்றும் கூறுவர்.




### 2. ஆம்பல்:

வேறுபெயர்: அல்லி மலர் (இளஞ்சிவப்பு, கருஞ்சிவப்பு, ஊதா, வெள்ளை நிறங்களில் காணப்படும்)



### 3. அனிச்சம் மலர்:

மூச்சுக்காற்றுப் பட்டாலே குழையும் அளவுக்கு அனிச்சம் மென்மையான மலர். மென் செம்மஞ்சள், நீலம், ஊதா ஆகிய நிறங்களில் காணப்படும்.



### 4. குவளை:

வேறுபேயர்: வெள்ளை அல்லி


ஆம்பல் மலரையும் அல்லி என்று கூறப்படுகிறது. இரண்டிற்கும் வேறுபாடு உள்ளது.

குவளை - மணமுள்ள மலர்
ஆம்பல் - மணமில்லா மலர்
இரண்டும் குளத்தில் பூக்கும் மலர்கள்.




### 5. குறிஞ்சி பூ:

கடல் மட்டத்திலிருந்து 1300 முதல் 2400 மீ உயரத்தில் இச்செடி வளரும். பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒரு முறையே பூக்கும் இப்பூக்கள் கோயில் மணிகளின் உருவம் கொண்டவை.



# வெண்ணிறப் பட்டாம்பூச்சி





வெள்ளை மேகத்திலிருந்து ஒரு வெண்--ணிறப்பட்டாம்பூச்சி இறங்கி வந்தது அது ஆற்றின் குறுக்கே பறந்தது. காடுகள் மற்றும் வயல்களில் பறந்தது.



சட்ரேன்று அது பார்த்தது வண்ணமய--மான பட்டாம்பூச்சிகள் கூட்டம். அவை எல்லாம், சட்டடையும் தொப்பியும் அணிந் திருந்தன. ரோதல்களில் ஒரு பையும், கைகளில் ஒரு பேனாவும் வைத்திருந்தன. வெள்ளை பட்டாம்பூச்சி, வண்ணமயமான பட்டாம்பூச்சிகளிடம், நீங்கள் எங்கே செல்கிறீர்கள்? என்று கேட்டது. நாங்கள் பள்ளிகூடம் போகிறோம் என்ற பட்டாம்பூச்சிகள், நீயும் எங்களோடு வர விரும்புகிறாயா? என்று கேட்டன.



சரி நானும் வருகிறேன், என்று பதிலளி--த்தது, வெள்ளை பட்டாம்பூச்சி. ஆனால் உன் சட்டை எங்கே? வண்ணப் பட்டாம்--பூச்சிகள் கேட்டன. உன் தொப்பி எங்கே, உன் பை எங்கே, உன் பேனா எங்கே.



வெண்ணிறப்பட்டாம்பூச்சி ' என்னிடம் சட்டையோ தொப்பியோ இல்லை, பையோ பேனாவோ இல்லை, என்னால் என்ன செய்ய முடியும் என்றது.' பிறகு வெண்ணிறப்பட்டாம்பூச்சி சந்தைக்குச் செல்ல முடவு செய்தது.



பிறகு வெண்ணிறப்பட்டாம்பூச்சி சந்தைக்குச் செல்ல முடவு செய்தது.



முதலில், அது ஒரு துணிகடைக்குப் பறந்தது. அங்கிருந்த நீலநிற வண்டிடம் கேட்டது 'உங்களிடம் சிவப்புச் சட்டை இருக்கிறதா'.



இருக்கிறது, 'இந்தச் சிவப்புப் பூக்களால் செய்த சட்டையைப் போட்டுப் பார்' என்றது, நீலநிற வண்டு. வெள்ளை பட்டாம்பூச்சி சிவப்பு சட்டை வாங்கியது.





அடுத்து ஒரு தொப்பி கடைக்குப் பறந்தது. அங்கிருந்த பழுப்பு வண்ண எறும்பிடம் கேட்டது உங்களிடம் நீலத்தொப்பி இருக்கிறதா. இதோ இதை எடுத்துக்--கொள். நீலநிறப் பூக்களால் செய்த தொப்பி. வெள்ளைப்பட்டாம்பூச்சி நீலத்தொப்பி வாங்கியது.





பிறகு அது பை விற்பனைக் கடைக்குச் சென்றது. அங்கிருந்த மஞ்சள் குருவியிடம் உங்கடளிடம் பச்சைப் பை இருக்கிறதா என்று கேட்டது. ஆம் என்னிடம் பச்சை இலைகளால் செய்த ஒரு பை இருக்கிறது, என்றது மஞ்சள் குருவி. வெள்ளைப் பட்டாம்பூச்சி பச்சை பையை வாங்கியது.



பிறகு அது ஒரு எழுதுபொருள் கடைக்குச் சென்றது. கடையில் இருந்த பச்சைத் தவளையிடம் கேட்டது. உங்களிடம் மஞ்சள் பேனா இருக்கிறதா. ஆம் இருக்கிறது இதோப் பார், என்றது. பட்டாம்பூச்சி, மஞ்சள் பேனா வாங்கியது.



பிறகு அது சூரியகாந்தி வயலில் உள்ள பட்டாம்பூச்சி பள்ளிக்குப் பறந்தது. வண்ணப் பட்டாம்பூச்சிகளுடன் சேர்ந்து சூரியகாந்திப் பூக்களில் விளையாடியது. கடைசியில், எல்லோரும் பள்ளி செல்லத் தயாரானார்கள்...



## புள்ளிகளை இணைத்து வண்ணம் தீட்டி மகிழுங்கள்



# சொற்களஞ்சியம்




## எங்கே போறீங்க



கழுகாரே கழுகாரே எங்க போறீங்க?
பழுப்பு நிற சட்டை போட்ட பாம்பு தேடிங்க

காக்கையாரே காக்கையாரே எங்க போறீங்க?
கண்ணுக்கேற்ற மையை தேடிக் கொண்டு வரங்க


கிளியாரே கிளியாரே எங்க போறீங்க?
கோவை பழம் தேடி தேடி தின்ன போரேங்க

கீரியாரே கீரியாரே எங்க போறீங்க?
சாம்பல் நில காடு தேடி போக போரேங்க

குயிலாரே குயிலாரே எந்க போறீங்க?
காக்காவின் கூடு தேடி முட்டை யிடங்க



கூட்டுப் புழுவே கூட்டுப் புழுவே எங்க போறீங்க?
வண்ணத்து பூச்சி ஆகி பறக்க போரேங்க



கெளுத்தி மீனே கெளுத்தி மீனே எங்க போறீங்க?
கடல் அளவு தண்ணி உள்ள ஆறு தேடிங்க

கேலி பேசும் தவளையாரே எங்க போறீங்க?
மாஞ்சள் ஆறு பாயும் ஊரு தேடித் தானுங்க


கொக்காரே கொக்காரே எங்க போறீங்க?
பசுமை மிகுந்த காடு தேடி பறந்து போரேங்க

கோழியாரே கோழியாரே எங்க போறீங்க?
ஊதாப்பூ காட்டுக்குள்ள தூங்க போரேங்க

கௌரி அக்கா கௌரி அக்கா கேள்வி போதுமே
போற போக்கை பார்த்தா நிலவு முட்டுமே.

---ரேவதி









## கெயர்களை எழுதுக

1.) ____________________

2.) ____________________

3.) ____________________

4.) ____________________

5.) ____________________

6.) ____________________

7.) ____________________

8.) ____________________

9.) ____________________

10.) ____________________

11.) ____________________







# பத்து வித்தியாசங்களை கண்டுபிடித்து வட்டமிடுக





# நிறங்களை கண்டுபிடித்து வட்டமிடுக


| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ல | ஆ | ங | ச | பி | சா | ஃ | ச | இ | ப |
| ர | ர | ய | வெ | நீ | ல | ம் | வ | டா | ச் |
| ம | ஞ் | ச | ள் | ரி | ந | த | ப | லி | சை |
| த | சு | ண | ளை | யா | வ | சி | ல | ல் | மா |
| ந | ந | ஒ | ச | னி | க | வ | ங | கு | ற |
| ச | க | உ | ன | கு | ரு | ப் | ள | ரு | ச |
| ஒ | ப | க | ப | ழு | ப் | பு | எ | மா | வ |
| டி | ம | ச | ய | ஸ் | பு | இ | ர | ச | டி |
| அ | ட | வ | உ | கா | ச | ந | ழ | ட் | கெ |
| ஊ | தா | ல | எ | ச | ப | கி | வ | னி | அ |

# அறிவியல் உலகம்

## வெடிக்கும் எரிமலைகள்:



மேக்மா மெலிந்து ஓடும் நிலையில் இருக்கும் போது, எரிமலைக்குழம்பு பெரும்பான்மையான நேரம் எரிமலைகளால் கசிய விடப்பட்டுக் கொண்டு இருக்கிறது. டெக்டோனிக் தட்டுகள் மோதிக்கொள்ளும் போது எரிமலை வெடிப்புகள் நிகழ்கின்றன. பூமியின் வெகு ஆழத்துக்குள் பாறை தள்ளப்படுகிறது. அங்கே அது உருகி பிறகு கட்டியாகிறது. ஒட்டிக் கொள்ளும் தன்மையுள்ள அது மேற்பரப்பில் ஊறத் தொடங்கும் போது மேலும் பசைத் தன்மை பெற்று எரிமலை துவாரத்தை வந்து அடைந்து கொள்கின்றது. அதனால் அதிகப்படியான அழுத்தம் உருவாகின்றது. ஒரு வெடிப்பில் மேக்மா வெளித்தள்ளப்படும் போது எரிமலைக்குழம்பு சாம்பல் மற்றும் தீப்பிழம்பு ஆகியன தடையின்றி வெளியேறுகின்றன.



## மின்னாற்றல்:

மின்சாரம் கண்ணுக்குத் தெரியாத ஆற்றல் வடிவமாகும். அணுக்களின் உள்ளே மின்னூட்டம் பெற்ற சிறிய துகள்களின் அடிப்படையில் இது இயங்குகின்றது. ஒரு அணுவின் மையக்கருவில் உள்ள புரோட்டான்கள் என்றழைக்கப்படும் துகள்கள் நேர்மின்நிலையைக் கொண்டுள்ளன. அணுவின் கருவை வேகமாகச் சுற்றி வருபவை எலெக்ட்ரான்கள் ஆகும். இவை எதிர்மின்நிலை கொண்டவை. பொதுவாக நேர்மின்நிலை மற்றும் எதிர்மின்நிலை இரண்டும் சரிசமமாக்கப்படுகின்றன. அவை சரிசமமாக இல்லாமல் இருந்தால் மின்விசை ஒன்று உற்பத்தி செய்யப் படுகின்டறது. நிலைபேற்று மின்சாரம் போன்று இது ஒரு இடத்தில் தங்கி இருக்கலாம் அல்லது பாயும் மின்சாரம் பேன்று ஓரிடத்தில் இருந்து வேறு ஓர் இடத்திற்கு நகரலாம். நமக்கு மின்சாரம் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. ஏனெனில் இவை கம்பிகள் வழி நமக்கு எங்கு தேவையோ அது வரை எடுத்துச் செல்ல முடியும். மேலும் தேவையான பிற வழிவங்--களில் அதாவது ஒளி, வெப்பம் இயக்கம் போன்று மாற்றிக் கொள்ள முடியும்.

## ஒரு நிலநடுக்கம் எவ்வளவு தெரியுமா?


நிலநடுக்கத்தின் அளவு அல்லது சக்தியைப் பதிவு செய்வதற்கு பல வழிகள் உள்ளன. ரிக்டர் அளவுதான் பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்படுகின்றது. தரையின் அதிர்வுகளைக் கண்டறிய வைக்கப்பட்டுள்ள கருவியான நிலநடுக்கமாளியில் பதிந்துள்ள அலைகளின் உயரத்தைப் பொறுத்து இந்த ரிக்டர் அளவு கணக்கிடப்படுகின்றது. ரிக்டர் அளவில் 6 எனக் கணக்கிடப்படும் ஒரு நிலநடுக்கம், நிலப்பரப்பு எந்த வகைப்பட்டது என்பதை பொறுத்து பாதிப்புகளை ஏற்படுத்தும். கடினமான அடிநிலைப் பாறையில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு ஏற்படும் பாதிப்பை விட மண் அல்லது மென்பாறையின் அஸ்திவாரங்களைபக் கொண்டு கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும். திருத்தப்பட்ட மெர்கல்லி அளவுகொல் ஒரு நிலநடுக்கத்தின் தீவிரத்தை அதனுடைய பாதிப்புகள் மூலம் காட்டுகின்றது.




# உணவும் வண்ணங்களும்

சிவப்பு - நன்மை

1. வைட்டமின் ஏ, வைட்டமின் சி நிரம்பியிருக்கும்.
2. ஆரோக்கியமான சருமம் தரும்.
3. சிவப்பு நிற உணவுகளில் உள்ள பொட்டாசியம், இதயத்திற்கு நன்மை பயக்கும்.





ஆரஞ்சு - எதிர்ப்பு சக்தி

1. வைட்டமின் சி, பீட்டா கரோட்டின் நிரம்பியிருக்கும்.
2. கொழுப்பின் அளவை குறைக்கும்.
3. எலும்புகளுக்கு ஊக்கம் தரும்.

பச்சை - நார்ச்சத்து

1. கலோரிகள் குறைவு.
2. எடையை கட்டுப்படுத்த உதவும்.
3. ஊட்டச்சத்து மிக்கது.





கருநீலம் - மருத்துவம்

1. இரும்பு சத்தி நிறைந்தது.
2. தோல்களில் ஏற்படும் சுருக்கங்களைத் தடுக்கும்.
3. பசியைத் தூண்டக் கூடியது.

ஊதா - தூய்மை

1. அன்டி ஆக்ஸிடன்ட் அதிகம் நிறைந்தது.
2. இதயம் மற்றும் இரத்த நரம்புகளின் சீரான இயக்கத்திற்கு உதவுகிறது.
3. நுரையீரல் தூய்மையடையும். சுவாச பிரச்சனைகளை நீக்கும்.






வெள்ளை - ஆரோக்கியம்



1. வைட்டமின் - கே மற்றும் ஒமேகா 3 சத்துகள் உள்ளன
2. ஜீரன சக்தியை அதிகரிக்கும்.
3. உடல் சூட்டை குறைக்கும் தன்மை உடையது.


# கண்டுபிடி கண்டுபிடி





 __________
 __________
 __________

 __________
 __________
 __________

 __________
 __________
 __________

 __________
 __________
 __________

 __________
 __________
 __________

 __________
 __________
 __________

# மாய உலகம்

முகிலா! மணி 9 ஆச்சு. வா., போய் துங்கலாம், என்று கூறிக்கெண்டே ஆலீஸ் இன் ஒண்டர்லாண்ட் பார்த்துகொண்டி--ருந்த தன் பையனை தூக்கி கொண்டு படுக்கை அறைக்குச் சென்றாள் வாசுகி.

முகிலன் முதலாம் வகுப்பு நிகழ்நிலையில் படிக்கும் ஆறு வயது சிறுவன் முகிலன் 'அம்மா! மாய உலகத் துக்கு நீங்க போயிருக்கீங்களா?'
வாசுகி: 'மாய உலகமா? அப்படி உலகம் இல்லைடா கண்ணா..'
முகிலன்: ' இருக்கு மா. அங்க மிருகங்கள், பறைவைகள், பூச்சிகள், பூக்கள் எல்லாம் பேசும் மா.'
வாசுகி: சிரித்துக் கொண்டே ' அப்படியா ? சரி நீ தூங்கு ' என்று கூறி சற்று நேரத்தில் இருவரும் உறங்கிப்போனார்கள்.

முகிலன் சட்டென்று விழித்தான். விழித்ததும் அவன் கண்ட காட்சி அவனை பிரமிக்கச் செய்தது. அவன் ஒரு பசுமையான தோட்டத்தில் இருந்தான். பறவைகள் சத்தமிட்டு கொண்டு உல்லாசமாக தோட்டத்தை சுற்றி வந்து கொண்டிருந்தன. வண்ண வண்ண பூக்கள் நிறைய பூத்து குலுங்கின. அனில்கள் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தன.

முகிலனின் பார்வை ஓர் அணிலின் மேல் பட்டதும். அருகில் சென்று அதை தொட்டுப் பார்த்தான்.

முகிலா! உன்னை இந்த மாய உலகிற்கு வரவேற்கிறேன். இன்று நீ வண்ணங்களை இங்கு கற்றுக்கொள்ள போகிறாய்.' என்றது அணில்.



இதை கேட்டதும் முகிலனால் மகிழ்ச்சி தாங்கிக் கொள்ள முடியவில்லை. 'நான் மாய உலகில் வண்ணங்களை கத்துக்க போறேன்.' என்று கூறியபடி மிக மகிழ்ச்சியாக ஓடினான்.

முகிலன்: ஏய் ரோஜா மலரே! உன் நிறம் என்ன?

ரோஜா மலர்: நான் சிவப்பு நிறம். பூ பேசுகிறது என்பதை உணர்ந்ததும் சிரித்துக்கொண்டே 'இந்த நிறத்தின் பெயர் சிவப்பா ' என்று கூறி அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.



முகிலன்: ' கிளி! உன் மூக்கு சிவப்பு நிறம் என்று எனக்கு தெரியும். ஆனால் உன் நிறம் என்ன?
கிளி: ' பச்சை நிறம். என்னை பச்சை கிளி என்று அழைப்பர்.'
'எனது நிறம் மஞ்சள் ' என்றது மாம்பழம்.
' நான் ஊதா நிறத்தில் உள்ளேன் ' என்றது கத்திரிக்காய்.
' சிவப்பு ரோஜா, பச்சை கிளி, மாம்பழம் மஞ்சள், ஊதா நிற கத்திரிக்காய் ' என்று கூறிக்கொண்டே நடந்தான்.

மயில் ஒன்று தோகை விரித்து ஆடுவதை கண்டு அசையாமல் நின்றான்.
மயில் ' முகிலா! என்ன அப்படி பார்க்கிறாய். நான் வெள்ளை நிறம். மிக அறிய வகை மயில் நான் '
காகம் 'இங்கே பார் முகிலா! எனது நிறம் கருப்பு.'
'அறிய வகை வெள்ளை மயில், காகம் கருப்பு ' என்று கூறியபடி நடந்தான்.



அவன் எதிரே மிகப் பெரிய மரம் இருந்தது. முகிலன் 'மரமே! உன் இலையின் நிறம் பச்சை. ஆனால் உன் கிளையின் நிறம் என்ன? '
மரம் 'பழுப்பு நிறம்' என்றது.

வண்ணத்துப்பூச்சி பறந்து வந்து அவன் சட்டையின் மேல் அமர்ந்தது.

'முகிலா! எனது நிறம் ஆரஞ்சு. ஆனால் என் இனத்தை சேர்ந்தவர்கள் பல வண்ணங்களில் இருப்பார்கள்.' என்று கூறி பட்டாம்பூச்சி பறந்து சென்றது.

அதன் அழகைப் பார்த்து கொண்டிருந்த முகிலனுக்கு, திடிரென்று ஓர் குரல் கேட்டது 'எனது நிறம் என்ன தெரியுமா? '. யார் பேசுவது என்று தெரியாமல் அங்கும் இங்கும்பார்த்தான் முகிலன். 'மேலே பார் முகிலா ' என்றது வானம்.
மாய உலகத்துல வானம் கூட பேசுது என்று எண்ணிக்கொண்டு மேலே பார்த்தான்.
'எனது நிறம் நீலம் ' என்றது வானம்.

சிவப்பு ரோஜா, பச்சை கிளி, மஞ்சள் மாம்பழம், ஊதா கத்திரிக்காய், வெள்ளை மயில், கருப்பு காகம், பழுப்பு கிளைகள், ஆரஞ்சு பட்டாம்பூச்சி, நீல வானம் ' என்று ராகத்துடன் பாடினான்.
' என்ன பாடுற முகிலா? விடிஞ்சிடுச்சு எழு! ' என்றாள் அவனது அம்மா வாசுகி.

கண் விழித்தான் முகிலன். 'அம்மா நான் மாய உலகத்தைப் பார்த்தேன் மா.' என்றான் நேற்று நிகழ்நிலை வகுப்பில் சொல்லிக் கொடுத்த நிறங்களும், அவன் பார்த்த திரைப்படமும் தான் அவனது கனவிற்கு காரணம் என்று எண்ணிய படி 'சரி முகிலா. வா போய் பல் தேச்சிப்ப ' என்று முகிலனை படுக்கையில் இருந்து கூட்டிச்சென்றாள், வாசுகி... ...முற்றும்
--தென்றல்

# போட்டி அறிவிப்பு

மிளிர் வாசக நெஞ்சங்கள் அனைவருக்கும் வணக்கம். நமது அறம் செந்தமிழின் ஆண்டு விழாவை மிளிர் வாசகர்களுடன் இணைந்து போட்டிகள் நடத்தி கொண்டாடி மகிழ திட்டமிட்டுள்ளோம்.

அவ்வகையில், நாம் நடத்தப் போகும் போட்டிகள் பிப்ரவரி 27 ஆம் தேதி நடைபெற உள்ளது. இதில் குழந்தைகள் கலந்து கொண்டு பரிசுகளை வெல்ல ஒரு அருமையான வாய்ப்புள்ளது.

இது இணையம் வழியாக நடைபெறப் போகும் பேட்டியாகும்.

அனுமதி இலவசம்.

போட்டி குறித்த தகவல்கள் பெற எங்களை உடனே மின்னஞ்சல் மூலம் அனுகவும்.
எங்களின் மின்னஞ்சல் முகவரி...... milir.senthamizh@gmail.com.

பதிவுகளை எங்களுக்கு பிப்ரவரி 25 ஆம் தேதிக்குள் தெரியப்படுத்தி போட்டிக்கு முன்னரே தயாராகுங்கள்.



இந்த வாய்பினை நழுவவிடாதீர் குழந்தைகளே!

தமிழ் மொழியை கொண்டாடுவோம்! தமிழ் மரபினை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு சேர்ப்போம்!

------- அறம் செந்தமிழின் மிளிர்.

# விடைகள்

## நிறங்களை வட்டமிடுக:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ல | ஆ | ங | ச | பி | சா | ஈ | ச | இ | ப |
| ர | ர | ய | வெ | நீ | ல | ம் | வ | டா | ச் |
| ம | ஞ் | ச | ள் | ரி | ந | த | ப | லி | சை |
| த | சு | ண | ளை | யா | வ | சி | ல | ல் | மா |
| ந | ந | ஒ | ச | னி | க | வ | ங | கு | ற |
| ச | க | உ | ன | கு | ரு | ப் | ள | ரு | ச |
| ஒ | ப | க | ப | ழு | ப் | பு | எ | மா | வ |
| டி | ம | ச | ய | ஸ் | பு | இ | ர | ச | டி |
| அ | ட | வ | உ | கா | ச | ந | ழ | ட் | கெ |
| ஊ | தா | ல | எ | ச | ப | கி | வ | னி | அ |

## பத்து வித்தயாசங்கள்:



# மாணவர் பக்கம்



ம. யாழினி
4 ஆம் வகுப்பு, கோவை





# மாணவர் பக்கம்




மீரா சதீஷ்குமார்,
5 ஆம் வகுப்பு,
சான்பிரான்சிஸ்கோ.



பிரகியா ஆனந்த்
1 ஆம் வகுப்பு
டெக்சாஸ்



## விடுகதைகள்:

1. வெளிச்சத்தல் மட்டும் தெரிவேன் இருட்டில் தெரியமாட்டேன். ஆனால் என் நிறமோ இருட்டின் நிறம். நான் யார் ?


2. சிவப்பு நிறத்தில் இருப்பேன். வாய் இல்லை என்றாலும் எவ்வளவு கொடுத்தாலும் சாப்பிடுவேன். தண்ணீரை கண்டால் மறைந்துவிடுவேன். நான் யார் ?

3. வாங்கும் போது கருப்பாபகவும், பயன்படுத்தும் போது சிவப்பாகவும், தூக்கி எரியும் போது சாம்பல் நிறமாகவும் மாறுவேன். நான் யார் ?

4. நீல கடலில் வெள்ளை தகடு. அது என்ன ?

5. இது பச்சை நிறமாக இருக்கும். சிவப்பு நிறத்தில் திறக்கும். சாப்பிடுவது சிவப்பு துப்புவது கருப்பு, அத என்ன ?

அனிருத் கிரிஷ்
4 ஆம் வகுப்பு
டெக்சாஸ்




| | | |
|---|---|---|
| 1. நிழல் | 2. நெருப்பு | 3. கரி |
| 4. நுரை | 5. தர்பூசணி | |

# தன்னம்பிக்கை



மகிழம் என்ற கிராமத்தில் மின்மினி என்ற சிறுமி தன் பெற்றோருடன் வாழ்ந்து வந்தாள். மின்மினிக்கு பள்ளிக்கூடம் செல்வது என்றால் கொள்ளை பிரியம். தினமும் காலை, நேரமாக எழுந்து தன் எல்லா வேலைகளையும் முடித்து விட்டு, பள்ளிக்கூடத்திற்கு தன் நண்பர்கள் பட்டாளத்தோடு கிளம்பி விடுவாள் மின்மினி. எதையும் ஆர்வத்தோடு கற்றுக் கொள்ளும் பழக்கம் அவளிடம் இயற்கையாகவே இருந்தது.



அப்படி ஒரு நாள் பள்ளி விட்டு வீடு திரும்பிய அவள் சோகமாக ஓர் இடத்தில் அமர்ந்து விட்டாள். அவளின் சோகமான முகத்தை கவனித்த அவள் அன்னை, அவளிடம் என்ன வென்று விசாரிக்க, நடந்ததை விவரமாக கூறினாள் மின்மினி.

அம்மா இன்னிக்கு பள்ளிக்கூடத்துல வர போற ஆண்டு விழாக் காக ஆடல் பாடல் நாடக நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்ள மாணவர்கள் கிட்ட பெயர் எடுத்தாங்க. உங்களுக்கு தெரியும்ல, நடன நிகழ்ச்சில கலந்துக்க நான் எவ்ளோ ஆர்வமா இருந்தேன்னு ?'

அவள் அன்னை: ' ஆமா இப்போ என்ன ஆச்சு? '

மின்மினி: 'நான் நிகழ்ச்சில கலந்துக்க பெயர் குடுக்க எழுந்தப்போ வருடா வருடம் ஆண்டு விழால பரதம் ஆடுவால என்னோட வகுப்புல கவிதான்னு ஒரு பொண்ணு, அவ என்ன கேலி செஞ்சிட்டாம்மா '

அவள் அன்னை: 'கவிதா என்ன சொன்னா? '

மின்மினி: ' உனக்கு ஆடவே தெரியாது நீ எதுக்கு பெயர் குடுக்கறனு கேட்டாம்மா '

அவள் அன்னை: நீ என்ன சொன்ன அதுக்கு

மின்மினி: நான் நல்லா பயிற்சி எடுத்து முழு முயற்சி செய்வேன்னு சொன்னேன். அதுக்கு அவ 'உனக்கு இப்படி அடுக்கு மொழில தான் பேச வரும் நடனமெல்லாம் வராது ' ன்னு அவ தோழிகள் கிட்ட சிரிச்சிக்கிட்டே சொல்லிட்டு அவ பெயர் குடுக்க எழுந்து போய்ட்டாம்மா. அவள் தோழிகள் உட்பட அங்க இருந்த எல்லாருமே என்ன ஒரு மாதிரி பாத்தாங்க. நான் பெயர் குடுக்காமயே விட்டுடேன். '

அவள் அம்மா: ம்ம்ம்



மின்மினி: ' எனக்கு வருத்தமா இருக்குமா, பள்ளிக்கூடம் போகவே பிடிக்கல '

அவள் அன்னை: ஆசிரியர் பெயர் குடுக்க சொன்னப்ப நீ எதை நினைத்து உடனே எழுந்த .

மின்மினி: ' எனக்கு நடனம்ல ஆர்வம். என்னால முடியும்னு தோனுச்சு. அதான்'

அவள் அன்னை: 'ம்ம்ம் அதுக்கு பெயர் தான் தன்னம்பிக்கை. நீ உன் மேல வெச்சு இருக்க நம்பிக்கை. நம்மால இதை நிச்சியம் செய்ய முடியும்னு உனக்குள்ள இருந்து நம்பிக்கை. நல்லா ஆடுவோமா ஆடமாட்--டோமான்னு நீ யோசிக்கவே இல்ல. கண்டிப்பாக கலந்துகிட்டு முழு முயற்சி தருவேன்னு உன் மேல நீ வெச்ச நம்பிக்கை தான் நீ உடனே பெயர் குடுக்க எழுந்த காரணம். '



மின்மினி மௌனத்துடன் தன் அன்னை கூறியதை கவனித்தாள். அவள் அன்னை: ' நீ நிகழ்சிக்கு பெயர் குடு, குடுக்காம போ, மத்தவங்க சொல்றத நம்பு, நம்பாம போ, ஆனா எப்போதும் உன் மேல நீ வெச்சுருக்க நம்பிக்கையை இழந்துவிடாதே. அது விலை மதிப--பற்றது. மின்மினி சொல்வதறியாமல் தன் அன்னையை இறுக்கி கட்டிக் கொண்டாள். அவள் அணைத்த வேகத்--தில் தான் சொல்ல வந்த கருத்தின் அர்த்தத்தை சரியாக தன் மகள் உணர்ந்து கொண்டாள் என்ற நம்பிக்கையில் அவள் அன்னையின் முகம் மலர்ந்தது.

-ஜனனி...




## சொல் விளையாட்டு

1. வண்ணம் வேறு சொல் (3) ____________
2. கிளியின் ஒரு வகை (6) ____________
3. விட்டமின் சி நிறைந்த பழம் (4) ____________
4. யானையின் நிறம் (4) ____________
5. கிருஷ்ணரின் நிறம் (5) ____________
6. வானத்தின் நிறம் (3) ____________
7. சமாதானத்தின் நிறம் (3) ____________
8. முதன்மை நிறங்களுள் ஒன்று (3) ____________
9. காகத்தின் நிறம் (4) ____________
10. 7 வண்ணங்கள் கொண்டது (4) ____________
11. தேசிய மலரின் நிறம் (7) ____________
12. வருமையின் நிறம் (4) ____________
13. ஈரோட்டிற்கு புகழ் சேர்க்கும் பொருள் (4) ____________

# நிறங்களை படித்து சரியான படத்தை தேர்வு செய்க


1. மஞ்சள்




2. சிவப்பு



3. ஆரஞ்சு



4. ஊதா





5. பச்சை




1. நகரம் 2. வீடு 3. பள்ளி


4. கடை 5. சாலை 6. உணவகம்















# மயங்கொலிச் சொற்கள்





ஒரு ______ (அலகிய / அழகிய) கிராமத்தில் சிறிய_____ (குலம் / குளம்) ஒன்று இருந்தது. அதில்
ஒரு _________(அன்னப் / அண்ணப்) பறவை _______(வால் / வாள் / வாழ்)ந்து வந்தது. அதற்கு
ஒரு _________(தவளை / தவலை) நண்பனும் இருந்தது. இருவருக்கும்______(மலை / மழை)
நீரில் ஆட்டம் போட மிகவும் பிடிக்கும். நீண்ட நாட்களாகவே ____(மலை / மழை) இல்லை என்பதால்
அவை இரண்டும்______(மழை / மலை) உச்சிக்கு சென்று தவம் செய்ய முடிவு செய்து, அதிகாலை முதல்
தவம் இருந்தன. மாலை______ (வேலை / வேளை) மேகம்_____(கரு / கறு)த்து மண் வாசனை வந்தது.
இருவரின் மீதும் _____ (மலை / மழை) துளி விழ ஆரம்பித்தது ____(சிரி / சிறி)து நேரத்தில் _________
(கனமாக / கணமாக) பெய்தது. இரண்டும் மகிழ்ச்சியாக குத்தாட்டாம் போட்டன. ______(மலை / மழை)யில்
இருந்து கீழே வந்து பார்த்த இருவருக்கும் மேலும் இன்ப அதிர்ச்சியாய் இருந்தது.
காரணம் ______(மலை / மழை) அதிகம் பெய்ததால் காட்டில் உள்ள _____(குலம் / குளம்)
எல்லாம் ___ (நிறம் / நிரம்)பி இருந்தன. இரண்டும் அங்கிருந்த _____(பாரை / பாறை)யின்
மீது (ஏரி / ஏறி) மீண்டும் ஒரு குத்தாட்டம் போட்டு தூங்கச் சென்றன.





அன்னம்



அண்ணம்



அழகு



அலகு



மலை



மழை



வாள்



வால்



தவலை



தவளை



ஏறி



ஏரி



The Perfect
Virtual Classroom for
Your Kids

For subscriptions of Milir
mail us @
milir.senthamizh@gmail.com




# Learn Tamil Online

Admissions are going on for National
and International Students

For More Details : +91 8754421233

Mail: aram.senthamizh@gmail.com

www.aramonstream.com